DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. 292/2018 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Pw 1 |
| Name | உமா மகேஸ்வரி |
| Father / Husband Name | சுப்பிரமணியன் |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 10th March 2023.

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது)**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

1) நான் எத்தனை வருடங்களாக சென்னையில் வசித்து வந்தேன் என்றால் 2017 முதல் கொரோனா ஆரம்பிக்கும் வரை இருந்தோம் அதன் பிறகு சிவகங்கைக்கு வந்துவிட்டோம். எதிரி பத்மா வீட்டிற்கு எந்த அறிமுகம் மூலம் குடிவந்தோம் என்றால் பத்மா வீட்டு மாடியில் என் அக்கா தெய்வநாயகி குடியிருந்தார் அதன் அடிப்படையில் அறிமுகம். என்அ க்கா எத்தனை வருடங்களாக பத்மா வீட்டில் குடியிருந்தார் என்றால் தோராயமாக 2014, 2015.

2) என் அக்கா பத்மா வீட்டில் எவ்வளவு பணம் கொடுத்து ஒத்திக்கு இருந்தார் என்றால் ரூ. 4,50,000/-. நான் சொல்வது போல் ரூ. 4,50,000/-க்கு ஒத்திக்கு

இருக்கவில்லை ரூ. 3,50,000/-. ற்கு தான் ஒத்திக்கு இருந்தார் என்றால் சரியல்ல. நான் ரூ. 3,50,000/- ஒத்திக்கு பத்மா வீட்டிற்கு குடிபோனேன் என்றால் சரியல்ல ரூ. 4,50,000/- கொடுத்தேன்.

3) நான் தாக்கல் செய்துள்ள ஒத்தி பத்திர ஆவணத்தின் அசல் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி அசல் பத்திரத்தில் பத்மா கையொப்பம் செய்யவில்லை என்றாலும், நான் மோசடியாக உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. காசோலையில் உள்ள பத்மாவின் கையொப்பத்திற்கும், ம.சா.ஆ. 1 ஒத்திப் பத்திரத்தில் உள்ள கையொப்பமும் வெவ்வேறாக உள்ளது என்றால் சரியல்ல இரண்டு கையொப்பமும் பத்மா தான் செய்தார்.

4) ஒத்திரப்பத்திரத்தின் ஒளி நகலை தான் தாக்கல் செய்துள்ளேன் அசலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் அசலை பத்மா வாங்கிக்கொண்டார். அசல் பத்திரத்தில் பத்மா கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான் அதிலிருந்து தான் ஜெராக்ஸ் எடுத்தேன். அசல் பத்திரத்தில் பத்மா கையொப்பம் கிடையாது மோசடியாக தயார் செய்து தான் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5) பத்மாவின் உறவினர் தினேஷ் என்பவருக்கும், எனக்கும் ஏற்கனவே பிரச்சனை ஏற்பட்டு அதனால் நான் 2 மாத காலத்தில் வீட்டை காலி செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்றால் தினேஷ் பத்மாவின் மற்றொரு வீட்டில் குடியிருந்தவர் அவர் என் பெரியப்பா மகள் பேத்தியை காதல் செய்து 2017 ம் ஆண்டு செப்டம்பர், அக்டோபர் மாதத்தில் திருமணம் செய்தார். அவரது காதல் திருமணத்திற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது.

6) மேற்படி பிரச்சனை காரணமாக தான் எனக்கும், பத்மாவிற்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் பத்மா வீட்டில் இருந்து எப்போது காலி செய்தேன் என்றால் 2018 ஆகஸ்ட் முதல் தேதியில் காசோலை ரூ. 1,00,000/- தலா - 2 கொடுத்தவுடன் காலி செய்தேன். பத்மாவின் வீட்டை விற்றுவிட்டார் வீட்டை வாங்கியவரும் என்னை காலி செய்ய சொல்லி சொன்னார். அதனால் பத்மாவிடம் மீதமுள்ள பணத்தை நான் கேட்டதற்கு இந்த காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்து பணத்தை பெற்றுக்கொள்ளுமாறும் அதன் பிறகு மீத பணத்தை சிறிது சிறிதாக தருவதாக கூறினார்.

7) மேற்கண்ட சங்கதிகளை எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகாரிலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் 2017 மே மாதத்திலேயே வீட்டை காலி செய்து ஒத்தி பணமான ரூ. 3,50,000/-த்தை எதிரியிடம் இருந்து ரொக்கமாக பெற்றுக்கொண்டு வீட்டை காலி செய்து ஒப்படைத்துவிட்டேன் அதை மறைத்து வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

8) எதிரி என்னிடம் கொடுக்காத என் அக்காவிடம் 2017 ம் ஆண்டிற்கு

முன்பு கொடுத்த காசோலையை நான் தவறாக பயன்படுத்திக்கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் மீத பணம் ரூ. 2,50,000/- பணத்தை எதிரியிடம் இன்று வரை கேட்காமல் உள்ளேன் என்றால் சரியல்ல. ரூ. 2,50,000/- பணத்தை எதிரியிடம் நான் ஏன் கேட்கவில்லை என்றால் நான் கேட்டேன் அதற்கு அவர் ஏற்கனவே ரூ. 2,00,000/- குறித்து வழக்கு தாக்கல் செய்துவிட்டதால் மீத பணத்தையும் நீதிமன்றத்தில் கேட்டுப் பெற்றுக்கொள் என்றார்.

9) நான் நீதிமன்றத்தில் ரூ. 2,50,000/- த்திற்கான பரிகாரம் கோரி நடவடிக்கை எதுவும் எடுத்துள்ளேனா என்றால் இல்லை இந்த வழக்கிற்கே நான் 5 வருடங்காள அலைந்து வருகின்றேன். ரூ. 2,50,000/- த்திற்காக காவல் துறையில் ஏதும் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. உண்மையில் நான் எனது முழு தொகையையும் பெற்றுவிட்டதால் தான் ரூ. 2,50,000/- த்திற்கு நீதிமன்ற நடவடிக்கையோஅல்லது காவல் துறையில் புகாரோ கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

10) நான் அனுப்பிய 07.09.2018 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பில் ஒத்தி காலம் நிறைவடைவதற்கு முன்பாகவே நான் காலி செய்துவிட்டதாகவும் அப்போது என் அக்காவிடம் எதிரி பத்மா பகுதி தொகையாக ரூ. 2,00,000/- ம் கொடுத்ததாகவும் வீட்டினை காலி செய்து சாவியை ஒப்படைக்கும் போது மீதத் தொகையை எதிரி தருவதாக ஒப்புக்கொண்டதாகவும், அதன் பின்பு மே 2017 ல் வீட்டை காலி செய்து சாவியை ஒப்படைத்துவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

11) நான் எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பில் உள்ள சங்கதிகளை நான் சொல்லவில்லையா என்றால் நான் தான் சொன்னேன். எனது வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள சங்கதிகளுக்கும், என்னுடைய புகாரில் நான் வீட்டை காலி செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் அக்காவின் கணவர் பெயர் கிருஷ்ணதாஸ் என்றால் சரிதான். என் அக்கா இன்றைய தேதி வரை அங்கு தான் குடியிருந்து வருகிறார் நான் 2020 மார்ச் மாதத்திற்கு பிறகு முதல் தற்போது வரை நான் அங்கு செல்லவில்லை என் அக்காவிடம் போனில் மட்டும் பேசுவேன். தற்போது வீட்டின் உரிமையாளர் யார் என்று கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் பெயர் தெரியாது.

12) 04.08.2018 ம் தேதி என் அக்காவின் கணவர் வீட்டின் உரிமையாளரின் கணவர் மீது கோடம்பாக்கம் காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தார் என்றால் இல்லை என் அக்கா கணவர் மீது அவர் தான் புகார் கொடுத்தார் அந்த விசாரணைக்கு நானும் சென்றிருந்தேன். அந்த விசாரணையில் காவல் ஆய்வாளர் பணம் கொடுத்ததற்கான ஆவணத்தை கேட்டதற்கு என் மனைவியிடம் பணம் கொடுத்ததற்கான ஆவணத்தை வாங்கி வருவதாக சொல்லி சென்றார் ஆனால் வரவில்லை.

13) நான் இந்த வழக்கை தாக்கல் செய்த 06.10.2018 முன்பு

23.08.2018 ம்தேதி என் அக்காவின் கணவர் எதிரி பத்மா மீது OS 4312/2018 என்ற வழக்கை சென்னை சிட்டி சிவில் 8 வது உதவி நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அவ்வழக்கின் முழுவிவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் குத்தகை பணம் முழுவதையும் கொடுத்துவிட்டதாக சொன்னதால் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அவ்வழக்கின் பரிகாரம் என்ன என்றால் எனக்கு தெரியாது.

14) அவ்வழக்கில் கதவு எண். 14/31 முதல் தளம், புலியூர்புரம், குகன் தெரு, கோடம்பாக்கம் என்ற முகவரியில் உள்ள வீட்டில் வசிக்கும் கிருஷ்ணதாஸ் குடும்பத்தை பத்மாவோ, அல்லது அவரது ஆட்களோ எந்தவொரு இடையூறும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கில் பத்மா வக்கீல் மூலம் என்ன பதில் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் பணத்தை கொடுத்துவிட்டதாக தான் சொல்லியுள்ளார்.

15) நான் அனுப்பிய அறிவிப்பிற்கு எதிரி பத்மா அனுப்பிய பதில் அறிவிப்பையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதில் விவரங்களை நான் வழக்கறிஞரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம். அதில் எதிரி தரப்பில் நான் ரூ. 3,50,000/-த்திற்கு பிப்ரவரி 2017 ம் வருடம் எதிரியின் வீட்டிற்கு நான் குடிவந்ததாகவும், 2 மாதத்தில் பிரச்சனை ஏற்பட்டு நான் ஒத்திப்பணம் ரூ. 3,50,000/-த்தை எதிரியிடம் இருந்து பெற்றுக்கொண்டு வீட்டை காலி செய்து ஒப்படைத்துவிட்டு சென்றதாகவும், எனது அக்கா மற்றும் அவரது கணவரிடம் அவர்கள் குடியிருந்த வீட்டை காலி செய்ய அவர்களுக்குரிய ஒத்தி பணத்திற்கு வழக்கு காசோலை எண்கள் 025887 மற்றும் 069690 இரண்டு காசோலைகளிலும் கொடுத்திருந்ததை தவறாக என் மூலமாக என் அக்கா மற்றும் அக்கா கணவர் முறைகேடு செய்து எனக்கும், எதிரிக்கும் எந்தவிதமான தொகையும் செலுத்தவில்லாத நிலையில் பொய்யாக இந்த வழக்கை உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

16) அதனால் தான் நான் தாக்கல் செய்த ஆவணங்களுக்கும், நிரூபண பிரமாணத்தில் உள்ள சங்கதிக்கும், வழக்கறிஞர் அறிவிப்புக்கும் நான் தற்போது குறுக்குவிசாரணையில் சொல்லியுள்ள சாட்சியத்திற்கும் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. காசோலையை நான் தான் நிரப்பினேனா என்றால் இல்லை பத்மா ஒருவரை அழைத்து வந்தார் அவர் தான் காசோலையை பூர்த்தி செய்தார். நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. காசோலை இரண்டையும் நான் திருவான்மியூர் இந்தியன் வங்கிக்கிளையில் வசூலுக்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கான வங்கிக்கிளை சிவகங்கையில் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கை நான் சென்னையில் இருக்கும் போதே இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தேன் என்றால் ஆமாம்.

17) நான் வழக்கை சென்னையிலேயே தாக்கல் செய்திருக்கலாம் வேண்டுமென்றே எதிரி பெண் என்று தெரிந்து கொண்டும் அவரை அலைக்கழிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த நீதிமன்றத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் அக்கா கணவர் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி ஆன விவரம் தெரியுமா என்றால் இல்லை இன்னும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. நான் சொல்வது பொய் என்றும், மேற்படி வழக்கு இடையில் தள்ளுபடி ஆகி தற்போது மீண்டும் அந்த வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

18) நான் சொல்வது போல் எதிரி எனக்கு எந்த பணமும் தரவேண்டியது இல்லை என்றாலும், என் அக்காவிடம் கொடுத்த காசோலையை வேண்டுமென்றே பயன்படுத்தி எதிரி குடும்பத்திற்க்கும், எங்களது குடும்பத்திற்க்கும் நடந்த பிரச்சனை காரணமாக ஏற்பட்ட தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**(ஓம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 10.03.2023**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.